[1989 ஏப்ரல் 27]

பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம்.

146—(*வினா எண். 1009)—திரு. வ. முல்லைவேந்தன்; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதியில், பொதியன்பள்ளம் அணைக்கட்டு திட்டம் அரசின் பாிசீலனையில் உள்ளதா?

(ஆ) பணி எப்போது தொடங்கப்பெறும்?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, (அ) இத்திட்டம் தல அதிகாரிகளின் விரிவான ஆய்வில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு தற்பொழுது இடமில்லை.

(இ) திட்ட மதிப்பீடு, தோராயமாக ரூ. 23.00 இலட்சங்கள் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு வறட்சியான பகுதியாக இருக்கிற காரணத்தால் 1974ஆம் ஆண்டில் நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அந்த பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு, ஆட்சி கவிழ்க்கப்பட்ட காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது. வறட்சியாக இருக்கிற அந்தப் பகுதியில், விவசாயிகள் மேம்பாடு அடைய விரைவில் நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல திட்டங்கள் இப்படி கைவிடப்பட்டுள்ளன. மோர்தானா திட்டம் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டதுதான். அது கைவிடப்பட்டது. செண்பகத் தோப்புத் திட்டம் அப்படி விடப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த அணைக்கட்டும் சேர்ந்திருக்கிறது. எனவேதான் இந்த அரசு இந்தத் திட்டங்களை எடுக்கவேண்டும், இவை வறட்சிப்பகுதிகளுக்கும் பயன்படும் என்ற எண்ணத்தோடு, இந்த திட்டத்தின் ஆய்வை மேற்கொளளும்படி தல அதிகாரிகளுக்கு—லோக்கல் ஆபீசர்ஸ்'—சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் அந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கே ஒரு பெரிய அணையைக் கட்டலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் 23 லட்சம் ரூபாய் என்பது ஒரு சிறிய ஏரி கட்டுகிற அளவிற்குத்தான் இருக்கும். எனவே, அதை ஒரு பெரிய அணைக் கட்டுத் திட்டமாக நிறைவேற்றவும், இந்த வறட்சிக் காலத்தில் பல்வேறு மீட்புப் பணியில் அந்த வேலைகளை எடுத்துக் கொள்ளவும் வேண்டுமென்று விரும்புகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஒரு தோராயமான மதிப்பீடாகத்தான் தெரிவித்தேன். வறட்சி நிவாரணப் பணியில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அளவிற்கு அவ்வளவு தொகையை அதில் போட முடியாது. அதற்கு வேறு திட்டங்கள் உண்டு. வேறு வகையில் அது கட்டப்படும். முதலில் ஆய்வு அறிக்கை கிடைக்கட்டும். எவ்வளவு தொகையில் அந்த அணையைக் கட்டுவது என்பதை அரசு பின்னர் கவனிக்கும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு தலைவர் அவர்களே தர்மபுரி மாவட்டம் பொதியன்பள்ளம் பகுதி, வாணியாறு அணைக்கட்டுப் பகுதி, தும்பஹள்ளி அணைக்கட்டுப் பகுதி, ஈச்சம்பாடி அணைக்கட்டுப் பகுதி ஆகிய பகுதிகளில் இலங்கை வாழ்த்தமிழர்களுக்காக கடந்த காலத்தில் கட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிமெண்ட் ஸீட் கூரை வேய்ந்த வீடுகள், இப்போது இலங்கை வாழ்த் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு விட்ட காரணத்தால் வீணாக பாழடைந்த நிலையில் இருக்கின்றனஇவைகள பொதுப்பணித்துறையைச் சேர்ந்தவை என்று சொலகிறார்கள். அப்படியானால் அவைகள் பழுதுபார்க்கப்பட்டு, வீடற்ற ஏழைகளுக்கு அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, புதிய தகவல். அரசு ஆராயும்.

TRUTH ALONE TRIUMPHS

கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய்.

147—(*வினா எண். 355)—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுக்கடை, கருங்கல், இரணியல் போன்ற பகுதிகளில் யானைக்கால் நோய் வேகமாகப் பரவிவருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அது குறித்து மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?